# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை-600 032.
தொலைபேசி: 044-22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in

**தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை அவர்கள் முன்பாக**

முன்னிலை: முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ),
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

*************

முறையீட்டு மனு எண்.0021/2015

ஆணை எண்.0006/2015

நாள்: 15/09/2015

திரு. கயிலை வேதரெத்தினம்,
22-D, பிடாரி கோவில் தெரு,
திருவாரூர்,
பின் கோடு 610 001.

- முறையீட்டு மனுதாரர்

ஆணையாளர்,
திருவாரூர் நகராட்சி,
திருவாரூர் – 600 002

- எதிர் மனுதாரர்

திருவாரூர், பிடாரி கோயில் தெருவைச் சேர்ந்த கயிலை வேதரெத்தினம் என்பவர், தனது வீட்டுமனை புல எண்.1371/3 சம்பந்தப்பட்ட புலப்பட பதிவேடு நகல் (TNLR) வழங்க ஆவண செய்யுமாறு விண்ணப்பித்த மனு இம்முறைமன்ற நடுவத்தில் பெறப்பட்டு 21/2015 எண்ணிட்ட மனுவாக பதிவு செய்யப்பட்டது.

## ஆணை

திருவாரூர், திரு. கயிலை வேதரெத்தினம் என்பவர் தனது வீட்டுமனை புல எண்.1371/3 சம்பந்தப்பட்ட புலப்பட பதிவேடு நகல் (TNLR) வழங்கக் கோரிய முறையீட்டு மனுவை திருவாரூர் நகராட்சி ஆணையருக்கு அனுப்பப்பட்டு உரிய நடவடிக்கை மேற்கொள்ளுமாறு அறிவுறுத்தப்பட்டது. 16.06.2015 நாளிட்ட தனது கடிதத்தில் திருவாரூர் நகராட்சி ஆணையர், மனுதாரர் கோரிய புலப்பட நகல் மற்றும் புலப்படப் பதிவேடு மனுதாரருக்கு மேற்படி தேதியில் நேரில் வழங்கப்பட்டு விட்டது என்று தெரிவித்துள்ளார். மனுதாரரும் 16.06.2015 நாளிட்ட தனது கடிதத்தில், தான் கோரிய புலப்பட நகலை பெற்றுக்கொண்டதாகத் தெரிவித்து இம்முறைமன்ற நடுவத்திற்கு தனது நன்றியினை தெரிவித்துள்ளார். மேலே கூறப்பட்ட சூழ்நிலையில் மனுதாரரின் கோரிக்கை நிறைவேறியுள்ளதால் இக்கோப்பின் மீதான நடவடிக்கையை இத்துடன் முடித்துக்கொள்ள இம்முறைமன்ற நடுவம் ஆணையிடுகிறது.

ஒம்/– முனைவர் சோ. அய்யர்
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

//உண்மை நகல் / உத்தரவின்படி / அனுப்பப்படுகிறது//

15/9/15
கண்காணிப்பாளர்

பெறுநர்,

திரு. கயிலை வேதரெத்தினம்,
22–D, பிடாரி கோவில் தெரு,
திருவாரூர்,
பின் கோடு 610 001.